# கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
# ஒன்றிணைந்த கிராமிய நகர அபிவிருத்தி மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டம் (IRDCRP)

THE WORLD BANK

## செயற்றிட்ட பணியாளர்களை ஆட்சேர்த்தல்

ஒன்றிணைந்த கிராமிய நகர அபிவிருத்தி மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டமானது (IRDCRP) இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் உலக வங்கி (WB) என்பன இணைந்து நிதியுதவியளிக்கப்படும் கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இதன் மொத்த செயற்றிட்டச் செலவு 103 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்பதுடன் இது கமத்தொழில், கால்நடை, கடற்றொழில் மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் உள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிலங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் பண்ணை மதிப்புச் சங்கிலியால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த 05 ஆண்டு காலத் திட்டத்தின் பிரதான நோக்கமானது செயற்றிட்டப் பிரதேசங்களில் கமத்தொழில் உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறன், போட்டித் தன்மை மற்றும் காலநிலைக்கு சீரமைவான திட்டத்தை மேம்படுத்துவதாகும்.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு (PMU) பின்வரும் (01 மற்றும் 25) ஒப்பந்த அடிப்படையிலான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் 2026 மார்ச் 28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

| இல. | 02/2026 சம்பளப் பிரிவின் நிலை | பதவிகள் | வேலை இடம் (PMU வின் கீழ் இணைக் கப்பட வேண்டும்) | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | C | சிரேஷ்ட திட்டப் பொறியியலாளர் (சிவில்) | PMU | 1 |
| 2 | C | சிரேஷ்ட திட்டப் பொறியியலாளர் (நீர்ப்பாசனம்) | PMU | 1 |
| 3 | C | சிரேஷ்ட சமூக அபிவிருத்தி நிபுணர் | PMU | 1 |
| 4 | C | நீர் முகாமைத்துவ நிபுணர் | PMU | 1 |
| 5 | C | காலநிலை திறன் கமத்தொழில் நிபுணர் | PMU | 1 |
| 6 | C | ICT/IEC நிபுணர் | PMU | 1 |
| 7 | C | மதிப்புச் சங்கிலி நிபுணர் | PMU | 1 |
| 8 | C | கமத்தொழில் வியாபார நிபுணர் | PMU | 1 |
| 9 | D | உள்ளகக் கணக்காய்வாளர் | PMU | 1 |
| 10 | E | சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) | PMU | 1 |
| 11 | E | சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரி (நீர்ப்பாசனம்) | PMU | 1 |
| 12 | F | திட்ட அதிகாரி (இளைஞர் மற்றும் மகளிர்) | PMU | 1 |
| 13 | F | திட்ட அதிகாரி (சர்வதேச அபிவிருத்தி மற்றும் திறன் உருவாக்கம்) | PMU | 1 |
| 14 | F | திட்ட அதிகாரி (காலநிலை திறன் கமத்தொழில்) | PMU | 1 |
| 15 | F | திட்ட அதிகாரி (கிராமிய நிதி முகாமைத்துவம்) | PMU | 1 |
| 16 | F | திட்ட அதிகாரி (நீர் முகாமைத்துவம்) | PMU | 1 |
| 17 | F | திட்ட அதிகாரி (மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) | PMU | 1 |
| 18 | F | தொழில்நுட்ப அதிகாரி (திட்டப் பிரதேசம்) | DAD | 4 |
| 19 | F | திட்ட அதிகாரி (பெறுகை) | DAD | 1 |
| 20 | F | திட்ட அதிகாரி (சமூக அபிவிருத்தி) | DAD | 1 |
| 21 | F | பொறியியல் உதவியாளர்கள் | ID | 2 |
| 22 | F | மூன்று மாகாணங்களுக்கான தொழில்நுட்ப அதிகாரி | PID | 3 |

அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்

விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 02/2026ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

- வயதெல்லை - விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் அறுபத்து மூன்று (63) வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.
- நன்கொடையாளர் நிதியளிப்புத் திட்டத்தில் இதனையொத்த அல்லது உயர்ந்த கொள்ளளவில் வேலை அனுபவம்
- தேவையைப் பொருத்து ஊழியர்கள் திட்ட வேலைத்தளங்களுக்கு பயணிக்க வேண்டியிருக்கும்.
- ஆங்கிலத்தில் புலமை, கணனி ஆற்றல் மற்றும் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிந்திருத்தல்
- தொடர்புடைய துறைகளில் உள்ள தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாகும்.
- தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மற்றும் நேர்காணலுக்காக அழைக்கப்படுவர் என்பதுடன் மேற்கூறிய ஆட்சேர்ப்பு தொடர்பில் கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் மற்றும் உறுதியானதுமாகும்.
- ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**

சகல விண்ணப்பதாரர்களும் தங்களது சுய விபரங்கள் (CV) சகிதம் உறவினரல்லாத இரு சான்று பகர்வோர் சகிதம் மற்றும் சகல சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து முகப்புக் கடிதம் சகிதம் தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 2026 ஜூலை 20ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பவும் இறுதி நாளுக்கு முன் **pmuirdcrp@gmail.com** எனும் முகவரிக்கு மின்னஞ்சலிடவும்.

தகவல் நோக்கத்திற்காக மட்டும் ***https://forms.gle/ctP6vt3PtwCVK4Lp8*** என்ற இணைப்பைப் பயன்படுத்தி கூகுல் தாளை நிரப்பவும். கூகுல் தாளின் ஊடாக சமர்ப்பிக்கப்படுபவை உத்தியோகபூர்வ விண்ணப்பமாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க / அரசு சார்ந்த சேவைகளில் இருந்தால் அவர்களின் விண்ணப்பங்களை இறுதி நாளுக்கு முன் இயைபுடைய நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ அலகு,**
**ஒன்றிணைந்த கிராமிய நகர அபிவிருத்தி மற்றும் காலநிலைக்குச் சீரமைவான திட்டம், இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல.**
**மேலதிக தகவல்களுக்கு (பதவி விபரங்கள் / குறிப்பு விதிமுறைகள், அடிப்படைத் தகைமைகள் போன்றன..) மற்றும் தயவு செய்து இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்: (https://www.agrimin.gov.lk & www.irdcrp.lk)**

**செயலாளர்,**
**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**